# NEWSPAPER CLIPPINGS

| MEDIA | TAMIL MALAR | DATE | 27 OCT 2013 (SUN) |
|---|---|---|---|
| PAGE / SECTION | 1 & 2 / MAIN NEWS | READERSHIP | 80,000 |

# பி.ஜே ரோட்டரி கிளப் முயற்சியில் விவேகானந்தா தமிழ்ப்பள்ளிக்கு புதிய வைத்தியசாலை

(என்.சீலன்,
படங்கள்.ரெ.ஆ.குமரேசன்)

பெட்டாலிங் ஜெயா, அக்.27–சமூக நல அக்கறையை முன்நிறுத்தி செயல்பட்டு வரும் பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப், விவேகானந்தா தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்காக புதிய வைத்தியசாலை (கிளினிக்) நிர்மாணிப்பதற்கு முன்வந்துள்ளது.

இப்பள்ளியின் சுமார் 1,486 மாணவர்களுக்கும், 71 ஆசிரியர்களுக்கும் இந்த வைத்தியசாலை பயனாக அமையும்.

மலேசியாவிலுள்ள தமிழ்ப்பள்ளிகள் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் பயிலும் பள்ளியாக பெட்டாலிங் ஜெயா விவேகானந்தா தமிழ்ப்பள்ளி விளங்குகிறது.




## பி.ஜே ரோட்டரி கிளப் முயற்சியில்.......

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

இம்மாணவர்களில் பலர் வறுமையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்காகவே பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் புதிய வைத்தியசாலையை இங்கு நிர்மாணிக்க முன்வந்துள்ளது.

பள்ளிக்கூடத்தின் பழுதுபார்க்கும் பணிகளுக்காகவும், வைத்தியசாலை நிர்மாணிப்பிற்கும், நேற்று இப்பள்ளியில் நடைபெற்ற தீபாவளி நல்லெண்ண நிகழ்வில் 75,000 வெள்ளிக்கான காசோலையை பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப்பின் தலைவர் கேப்டன் எச்.எஸ்.தரன் தலைமையாசிரியர் பாலமோ கனிடம் வழங்கினார்.

புதிய வைத்தியசாலை கட்டும் பணிகள் விரைவில் தொடங்கப்படும். இதுமட்டுமல்லாமல் மோசமான நிலையில் பள்ளியிலுள்ள கூரைகளை புதிதாக மாற்றிக் கொடுக்கவும் ரோட்டரி கிளப் முன்வந்துள்ளது. தமிழ்ப்பள்ளி மாணவர்கள் சுகாதாரமான சூழலில் கல்வி கற்க வேண்டும். புதிய வைத்தியசாலை அமைக்கப்படுவதன் மூலம் மாணவர்களின் பெற்றோர்களுக்கு மருத்துவ செலவுகள் இருக்காது என எச்.எஸ்.தரன் தமதுரையில் பேசினார்.